பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண் : 212 நாள் : 22.12.2018

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிக்க நீர்நிலைகளை புனரமைத்தல் மற்றும் பசுமை பரப்பளவை அதிகரிக்க மரங்கள் நடுதல் போன்ற பணிகள் நடைபெற்று வருவதை ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 210 நீர்நிலைகளில் 104 நீர்நிலைகளை புனரமைத்து நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிக்கும் வகையில் மேம்படுத்தும் பணிகளும் பசுமை பரப்பளவை அதிகரிக்க ரூ.5.29 கோடி மதிப்பீட்டில் 23,000 மரங்கள் நடும் பணிகளும் நடைபெற்று வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் சென்னை சீர்மிகு நகர திட்ட நிதியின் மூலம் 63 நீர்நிலைகள் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், 36 நீர்நிலைகளை புனரமைக்கும் பணிகள் பெருநிறுவனங்களின் சமூக பொறுப்பு (Corporate Social Responsibility) நிதியின் மூலம் நடைபெற்று வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து 5 நீர்நிலைகள் புனரமைக்கப்பட்டுள்ளது. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 57 நீர்நிலைகளை புனரமைக்க TWIC நிறுவனம் மூலம் விரிவான திட்ட அறிக்கை (Detail Project Report) அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொசஸ்தலை வடிநில பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் திட்டத்தின் கீழ் 49 நீர்நிலைகளை புனரமைக்க விரிவான திட்ட அறிக்கை (Detail Project Report) தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள ஆசிய வங்கியின் நிதி உதவி பெறுவதற்காக மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பசுமை பரப்பினை அதிகரிக்கும் வகையில், ஒவ்வொரு வருடமும் 1 லட்சம் மரங்கள் என ஐந்து வருடங்களுக்கு பாரம்பரிய வகை மரங்கள் நட முடிவு செய்யப்பட்டு, முதற்கட்டமாக 2018–19 நிதியாண்டில் ரூ.5.29 கோடி மதிப்பீட்டில் 23,000 மரங்கள் நடுவதற்கு அனுமதி பெறப்பட்டு, மரங்கள் நடவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. பல்வேறு மண்டலங்களில் இதுநாள்வரை 8,439 மரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளது.

நீர்நிலைகளை புனரமைக்கும் திட்டத்தின்கீழ் மாதவரம் மண்டலத்தில் உள்ள ஓமக்குளம் புனரமைக்கும் பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகிறது. இக்குளத்தின் நீர்சேமிக்கும் கொள்ளளவை அதிகரிக்கும் வகையில் 15 அடி அளவிற்கு இரண்டு அடுக்காக ஆழப்படுத்தப்பட்டுள்ளது. **இத்திட்டப்பணிகளை ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் 20.12.2018 அன்று நேரில் சென்று ஆய்வு செய்தார்.** பின்னர் அதிகாரிகளிடம் இப்பணிகளை விரைந்து முடிக்கவும், பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் நடைபாதை, பசுமையான மரங்கள் மற்றும் செடிகள் அமைக்கவும், பொழுதுபோக்கு அம்சங்களை அமைக்கவும் அறிவுறுத்தினார்கள்.

இதனை தொடந்து மாதவரம் மண்டலம், பால்பண்னை சாலை பகுதிக்கு சென்ற ஆணையாளர் அவர்கள் சென்னை மாநகரின் பசுமை பரப்புளவை அதிகரிக்கும் திட்டத்தின்கீழ் மரக்கன்றுகள் நடும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த ஆய்வின் போது, துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்கள், மேற்பார்வை பொறியாளர் (பூங்கா) திரு.எஸ்.காளிமுத்து, மாதவரம் மண்டல அலுவலர் திரு.கே.பி.விஜயகுமார் உட்பட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**